**<u>15.10.2019 அ.வ.எண். 42/2005 வா.த.சா.1 யசோதா</u>**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

எனது பெயரில் பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வழங்கப்பட்ட சிறு வணிக கடன் அட்டை வா.த.சா.ஆ 21. ஆகும். எனது வாக்காளர் சீட்டு வா.த.சா.ஆ 22 ஆகும். 2005ம் வருடம் எனது கணவர் மாணிக்கம் என்பவருக்கு உதவி கணக்கு அலுவலர், மின்சார வாரியம், வந்தவாசி அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் வா.த.சா.ஆ 23 ஆகும். செங்காடு இந்தியன் வங்கியால் 2019ம் வருடம் எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் வா.த.சா.ஆ 24 ஆகும். எனது மகள் 5ம் வாதியின் திருமண அழைப்பிதழ் வா.த.சா.ஆ 25 ஆகும். எனது மகள் 2ம் வாதியின் திருமண அழைப்பிதழ் வா.த.சா.ஆ 26 ஆகும். எனது மகன் 6ம் வாதியின் திருமண அழைப்பிதழ் வா.த.சா.ஆ 27 ஆகும். தாவா சொத்து சம்மந்தமான வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சிட்டா நகல் வா.த.சா.ஆ 28 ஆகும். மேற்சொன்ன ஆவணங்கள் அனைத்தும் 1 முதல் 9 பிரதிவாதிகளின் வழங்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**